# முக்கிய குறிப்புகள்

## தாவர ஹார்மோன்கள்

**தாவர ஹார்மோன்கள் :** தாவரங்களால் உற்பத்தி செய்யப்படும் சில வேதிப்பொருட்கள் தாவரங்களில் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளைச் செய்கின்றன.

- **வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஹார்மோன்கள் :** ஆக்சின்கள், சைட்டோகைனின்கள் மற்றும் ஜிப்ரல்லின்கள்
- **வளர்ச்சியை தடை செய்யும் ஹார்மோன்கள் :** அப்சிசிக் அமிலம் மற்றும் எத்திலின்

## தாவர ஹார்மோன்களின் வகைகள்

| ஹார்மோன்கள் | விளக்கம் | வாழ்வியல் விளைவுகள் |
|---|---|---|
| **1. ஆக்சின்கள்** | • வேர் மற்றும் தண்டின் நுனியில் உற்பத்தி செய்யப்படுகிறது.<br>• பிறகு, நீட்சிப் பகுதிக்கு நகர்கின்றன.<br>• **வெண்ட்-ன் ஆய்வுக்கு பிறகு** (அவினா முளைக்குருத்து உறை)<br>**ஆக்சின்களின் வகைகள்**<br>**இயற்கை ஆக்சின்கள்:** IAA, PAA, IAN<br>**செயற்கை ஆக்சின்கள்** : 2, 4 D, IBA, NAA | • **தண்டு & முளைக்குருத்தின் நீட்சியை** ஊக்குவிக்கிறது.<br>• **குறைந்த செறிவில்** வேர் உருவாதலைத் தூண்டுகிறது மற்றும் **அதிக செறிவில்** வேர் உருவாதலைத் தடைசெய்கிறது.<br>• **நுனி ஆதிக்கம் :** நுனி மொட்டுகளில் உற்பத்தி செய்பவை, பக்கவாட்டு மொட்டுகளின் வளர்ச்சியைத் தடை செய்கின்றது.<br>• **கருவுறாக்கனி – எ.கா:** திராட்சை, எலுமிச்சை.<br>• **உதிர்தல் அடுக்கு** உருவாதலைத் தடுக்கிறது. |
| **2. சைட்டோ கைனின்கள்** | • செல் பகுப்பு அல்லது சைட்டோகைனசிஸ் நிகழ்வை ஊக்குவிக்கும்.<br>• சியாட்டின் என்பது சியா மெய்ஸ் (மக்காச்சோளம்) தாவரத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது. | • செல் பகுப்பு (சைட்டோகைனசிஸ்), செல்கள் நீட்சியடைதல், உருவத்தோற்றம்.<br>• நுனி மொட்டு இருக்கும்போதே **பக்கவாட்டு மொட்டின் வளர்ச்சியை** ஊக்குவிக்கின்றன.<br>• **ரிச்மாண்ட் லாங்க் விளைவு :** தாவரங்கள் முதுமையடைவதை தாமதப்படுத்தும். |
| **3. ஜிப்ரல்லின்கள்** | • **பக்கானே நோய் அல்லது கோமாளித்தன நோய்** நெல்லின் கணுவிடைப் பகுதியின் இத்தகைய நீட்சி ஜிப்ரில்லா பியூஜிகுராயால் ஏற்பட்டது.<br>• செயல்திறன் மிக்க பொருள் : **ஜிப்ரல்லிக் அமிலம்.** | • **கணுவிடைப்பகுதியின் அசாதாரண நீட்சியைத்** தூண்டுகிறது. **எ.கா:** மக்காச்சோளம், பட்டாணி<br>• **போல்டிங் :** நெருங்கிய தாவரங்களின் மீது ஜிப்ரல்லின்களைத் தெளிக்கும் போது, திடீரென தண்டு நீட்சியடைவதும் அதன் தொடர்ச்சியாக மலர்தலும் நிகழ்கின்றன.<br>• ஆண் மலர்கள் தோன்றுவதை ஊக்குவித்தல் (வெள்ளரி).<br>• உருளைக்கிழங்கின் **உறக்க நிலையை** நீக்குதல்.<br>• **விதைகளற்ற கனிகள் – எ.கா:** தக்காளி |
| **4.அப்சிசிக் அமிலம் (ABA)** | **வளர்ச்சி அடக்கி –** உதிர்தல் மற்றும் உறக்க நிலையை ஒழுங்குபடுத்தும். இது பசுங்கணிகங்களில் காணப்படும்.<br>**இறுக்கநிலை ஹார்மோன் :** பல்வேறு வகையான இறுக்க நிலைகளுக்கு எதிராக தாவரங்களின் சகிப்புத் தன்மையை அதிகரிக்கிறது. | • **உதிர்தல் நிகழ்வை** ஊக்குவிக்கிறது. (இலைகள் கிளையிலிருந்து தனித்து உதிர்ந்து விடும்).<br>• **இலைத்துளையை** மூடச்செய்கிறது.<br>• இலைகளில், பச்சையத்தை இழக்கச் செய்து **மூப்படைவதை** ஊக்குவிக்கிறது.<br>• குளிர்காலங்களின் போது, மொட்டு உறக்கத்தைத் தூண்டுகிறது. **எ.கா:** பிர்ச்<br>• தக்காளி தாவரத்தில், **பக்கவாட்டு மொட்டின் வளர்ச்சியைத்** தடைசெய்யும் வளர்ச்சி அடக்கி ஆகும். |
| **4. எத்திலின்** | • வாயு நிலையில் உள்ள தாவர ஹார்மோன் மற்றும் இது ஒரு வளர்ச்சி அடக்கி ஆகும்.<br>• கனிகள் பழுக்கும் போது அதிக அளவு உற்பத்தியாகிறது. | • ***கனிகள் பழுத்தல்.*** **எ.கா:** தக்காளி, ஆப்பிள்<br>• நீட்சி அடைவதை தடுக்கிறது மற்றும் மூப்படைவதை விரைவுப்படுத்துகிறது.<br>• இலை, மலர் மற்றும் கனியில் உதிர்தல் அடுக்கு உற்பத்தியாவதைத் தூண்டுகிறது.<br>• மொட்டுகள், விதைகளின் உறக்கத்தை நீக்குகிறது. |

## மனித நாளமில்லாச் சுரப்பி மண்டலம்

☞ **என்டோகிரைனாலஜி** – நாளமில்லாச் சுரப்பி மண்டலம் & அதன் செயல்பாடு பற்றிய படிப்பு.

☞ **ஹார்மோன்கள்** – நாளமில்லாச் சுரப்பிகளில் குறைந்த அளவு சுரக்கும் சுரப்பிகள் ஆகும்.

☞ **நாளமுள்ள சுரப்பிகள்** சுரக்கும் பொருளினை எடுத்துச் செல்ல நாளங்கள் உள்ளன.
**எ.கா :** உமிழ் நீர் சுரப்பிகள், பால் சுரப்பிகள் மற்றும் வியர்வை சுரப்பிகள்.

## பிட்யூட்டரி சுரப்பி / ஹைப்போபைஸிஸ் / தலைமை சுரப்பி

| | |
|---|---|
| **அமைப்பு** | • பட்டாணி வடிவம் கொண்டது.<br>• மூளையின் அடிப்பகுதியில் ஹைப்போதலாமசுடன், பிட்யூட்டரி தண்டின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.<br>• **2 கதுப்புகள்** : முன் கதுப்பு(**அடினோஹைப்போபைசிஸ்**), பின் கதுப்பு (**நியூரோஹைப்போபைசிஸ்**)<br>"**தலைமை சுரப்பி**" : இது பிற நாளமில்லாச் சுரப்பிகளை ஒழுங்குப்படுத்தி கட்டுப்படுத்துகிறது. |

### முன் கதுப்புகள் சுரக்கும் ஹார்மோன்கள் (அடினோஹைப்போபைசிஸ்)

| | |
|---|---|
| **1. வளர்ச்சி ஹார்மோன் (GH)** | உடல் திசுக்களின் வளர்ச்சி & பெருக்கத்தை ஊக்குவிக்கிறது. |
| **2. தைராய்டைத் தூண்டும் ஹார்மோன் (TSH)** | தைராய்டு சுரப்பியை கட்டுப்படுத்துகிறது. |
| **3. அட்ரினோ கார்ட்டிக்கோட்ராபிக் ஹார்மோன்(ACTH)** | புரத உற்பத்தி இதில் நடைபெறுகிறது. |
| **4. கொனாடோட்ராபிக் ஹார்மோன் (GTH)** | இயல்பான இனப்பெருக்க உறுப்பு வளர்ச்சிக்கு காரணமாகும். |
| **ஃபாலிக்கிள்களைத் தூண்டும் ஹார்மோன் (FSH)** | • **ஆண்** – விந்தகங்களின் எபிதீலியத்தை தூண்டுகிறது.<br>• **பெண்** – அண்டச் சுரப்பியினுள் அண்டச்செல்கள் வளர்ச்சி அடைவதை ஊக்குவிக்கின்றது. |
| **லூட்டினைசிங் ஹார்மோன் (LH)** | • **ஆண்** – டெஸ்டோஸ்டிரோன் சுரக்கின்றது.<br>• **பெண்** – அண்டம் வளர்ச்சி அடைதல், ஈஸ்ட்ரோஜன் (ம) புரோஜெஸ்ட்ரான் உருவாதல். |
| **5. புரோலாக்டின் (PRL) / லாக்டோஜனிக் ஹார்மோன்** | பால் சுரப்பியின் வளர்ச்சி மற்றும் குழந்தை பேற்றிற்கு பின் பால் உற்பத்தியை தூண்டுகிறது. |

### பின்கதுப்புகள் சுரக்கும் ஹார்மோன்கள் (நியூரோஹைப்போபைஸிஸ்)

| | |
|---|---|
| **வாசோபிரஸ்ஸின் / ஆன்டிடையூரிட்டிக் ஹார்மோன் (ADH)** | நீர் மீளஉறிஞ்சப்படுதலை அதிகரிக்கிறது மற்றும் சிறுநீர் மூலம், வெளியேற்றப்படும் நீர் இழப்பைக் குறைக்கிறது. |
| **ஆக்ஸிடோசின்** | குழந்தைப்பேற்றின் போது கருப்பையைச் சுருக்கியும் விரிவடைய செய்தும், குழந்தைப்பேற்றுக்கு பிறகு பால் சுரப்பிகளில் பாலை வெளியேற்றவும் காரணமாகிறது. |

## தைராய்டு சுரப்பி

| | |
|---|---|
| **அமைப்பு** | • மூச்சுக்குழலின் இருபுறம் உள்ள இரு கதுப்புகளும் **இஸ்துமஸ்**-ஆல் இணைக்கப்பட்டுள்ளன.<br>• நுண் கதுப்புகள் கனசதுர எபிதீலிய செல்களை சுவராகக் கொண்டுள்ளது மற்றும் இதன் உள்ளே **தைரோகுளோபுலின்** நிரம்பியுள்ளது. |
| **ஆளுமை ஹார்மோன்கள்** | அ) ட்ரைஅயோடோ தைரோனின; (T3)<br>ஆ) டெட்ராஅயோடோ தைரோனின் அல்லது தைராக்சின் (T4) |
| **பணிகள்** | • வளர்ச்சிதை மாற்றவீதம் (BMR)> உடல் வெப்பநிலை மற்றும் மைய நரம்பு மண்டலம் ஆகியவற்றை பராமரிக்கிறது.<br>• உடல் வளர்ச்சி மற்றும் எலும்புகள் உருவாக்கம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகிறது.<br>• உடல், மனம் மற்றும் ஆளுமை வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகிறது. |

## பாராதைராய்டு சுரப்பி

| | |
|---|---|
| **அமைப்பு** | தைராய்டு சுரப்பியின் பின்புறத்தில் நான்கு சிறிய வட்ட வடிவத்தில் அமைந்துள்ளன. |
| **பணிகள்** | • உடலில் கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் வளர்சிதை மாற்றத்தை ஒழுங்குப்படுத்துகிறது.<br>• இரத்தத்தில் கால்சியம் அளவை பராமரிப்பதற்காக எலும்பு, சிறுநீரகம் மற்றும் குடல் ஆகியவற்றில் செயலாற்றுகிறது. |

## கணையம் (லாங்கர்ஹான் திட்டுகள்)

| | |
|---|---|
| **அமைப்பு** | இரைப்பைக்கும் டியோடினத்திற்கும் இடையில், மஞ்சள் நிறத்தில் நீள் வாட்டத்தில் உள்ளது. இது நாளமுள்ள சுரப்பி (செரித்தலுக்காக கணைய நீரைச் சுரக்கிறது) மற்றும் நாளமில்லாச் சுரப்பி (லாங்கர்ஹான் திட்டுகளால் ஆனது : **ஆல்.ஃபா செல்கள் - குளுக்கோகான் மற்றும் பீட்டா செல்கள் - இன்சுலின்**) என இரு வழிகளிலும் பணிபுரிகிறது. |
| **பணிகள்** | **இன்சுலின் :** குளுக்கோஸைக் கிளைக்கோஜனாக மாற்றி செல்களுக்குள் குளுக்கோஸ் செல்வதை ஊக்குவிக்கிறது. இரத்தத்தில் குளுக்கோஸ் அளவைக் குறைக்கிறது.<br>**குளுக்கோகான்:** கல்லீரலில் கிளைக்கோஜன் குளுக்கோஸாக மாற்றம் அடைய உதவுகிறது. இரத்தத்தில் குளுக்கோஸ் அளவை அதிகரிக்கிறது. |

| | |
|---|---|
| **அட்ரினல் சுரப்பி / சிறுநீரக மேற்சுரப்பிகள்** | |
| **அமைப்பு** | ஒவ்வொரு சிறுநீரகத்தின் மேல்புறத்திலும் அமைந்துள்ளது.<br>வெளிப்புறப்பகுதி – **அட்ரினல் கார்டெக்ஸ்** & உட்புறப்பகுதி – **அட்ரினல் மெடுல்லா** |
| **அட்ரீனல் கார்டெக்ஸ் ஹார்மோன்கள் – கார்ட்டிகோஸ்டீராய்டுகள்** | |
| **குளுக்கோகார்ட்டிகாய்டுகள்** | • சோனா பாஸிகுலேட்டாவில் சுரப்பவை **கார்ட்டிசோல்(உயிர் காக்கும் ஹார்மோன்** மற்றும் **கார்ட்டிகோஸ்டிரான்** ஆகியவை சுரக்கின்றன.<br>• இது செல்களில் வளர்ச்சிதை மாற்றத்தை ஒழுங்குப்படுத்துவதாகவும், அழற்சி மற்றும் ஒவ்வாமை தடுப்புப் பொருளாகவும் செயல்படுகிறது. |
| **மினரலோக்கார்டிகாய்டுகள்** | • சோனா குளாமருலோசாவால் சுரக்கும் ஹார்மோன் **ஆல்டோஸ்டிரான்.**<br>• சிறுநீரகக் குழல்களில் சோடியம் அயனிகளை மீள உறிஞ்சுதலுக்கு உதவுகிறது.<br>• மின்பகு பொருட்களின் சவ்வூடு பரவல், இரத்த அழுத்தம் ஆகியவற்றை ஒழுங்குப்படுத்துகிறது. |
| **அட்ரீனல் மெடுல்லா ஹார்மோன் (அவசர கால / சண்டை, பயமுறுத்தும் (ம) பறக்கும் ஹார்மோன்)** | |
| **அமைப்பு** | குரோமா.ீபின் செல்களால் ஆனது. |
| ***a)* எபிநெஃப்ரின் (அட்ரீனலின்)**<br>***b)* நார் எபிநெஃப்ரின் (நார் அட்ரீனலின்)** | • மனஅழுத்தம் & உணர்ச்சி வசப்படும் காலங்களில் உற்பத்தியாகின்றன.<br>• இது கிளைக்கோஜன் குளுக்கோஸாக மாறுவதை ஊக்குவிக்கின்றன.<br>• இதயத்துடிப்பு, இரத்த அழுத்தம் மற்றும் சுவாச வீதத்தை அதிகரிக்கிறது.<br>• கண் பாவையை விரிவடையச்செய்கிறது.<br>• தோலினடியில் செல்லும் இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. |
| **இனப்பெருக்கச் சுரப்பிகள்** | |
| **விந்தகம் (ஆண் இனப்பெருக்க சுரப்பிகள்)** | |
| **அமைப்பு** | செமினி.ீபெரஸ் குழல்கள், லீடிக் செல்கள் (நாளமில்லாச் சுரப்பி) மற்றும் செர்டோலி செல்களைக் கொண்டுள்ளது. |
| **டெஸ்டோஸ்டீரான்** | விந்து செல் உற்பத்தியில் பங்கேற்கிறது, புரத உற்பத்தியைத் தூண்டி தசை வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.<br>இரண்டாம் நிலை பால் பண்புகளை வளர்க்கிறது.(உடல் மற்றும் முகத்தில் ரோமங்கள் வளர்தல், குரலில் ஏற்படும் மாற்றம்). |
| **அண்டகம் (பெண் இனப்பெருக்கச் சுரப்பி)** | |
| **அமைப்பு** | அடிவயிற்றின் இடுப்பெலும்புப் பகுதியில் அமைந்துள்ளன. |
| **ஈஸ்ட்ரோஜன்** | அண்டத்தின் **கிரா.ீபியன் செல்களினால்** சுரக்கப்படுகின்றது.<br>**பணிகள் :** பருவமடையும்போது உடலில் மாற்றம், அண்டசெல் உருவாக்குதல், அண்டபாலிக்கிள் செல்கள் முதிர்வடைவதைத் தூண்டுதல், இரண்டாம் நிலை பால் பண்புகள் (மார்பக வளர்ச்சி) |
| **புரோஜெஸ்ட்ரான்** | அண்டம் விடுபடும்போது பிரியும் .ீபாலிக்கிள்கள் உருவாக்கும் **கார்ப்பஸ் லூட்டியத்தில்** உற்பத்தியாகிறது.<br>**பணிகள் :** முன் மாதவிடாய் கால மாற்றங்களுக்கு காரணமாதல், கர்ப்ப காலத்தினை பராமரிக்கிறது, தாய்-சேய் இணைப்புத்திசு உருவாதல். |
| **தைமஸ் சுரப்பி** | |
| **அமைப்பு** | • நாளமில்லாச் சுரப்பியாகவும், நிணநீர் உறுப்பாகவும் செயல்படுகிறது.<br>• மார்பின் மேற்புறத்தில் மூச்சுக்குழலின் கீழ்ப்புறத்தை ஒட்டி அமைந்துள்ளது. |
| **தைமோசின்** | • நோய் தடைக்காப்பு மண்டலத்தின் செயல்பாடுகளைத் தூண்டுகிறது.<br>• **லிம்.ீபோசைட்டுகள்** உருவாதலையும் வேறுபடுதலையும் தூண்டுகிறது. |

| சுரப்பிகள் | குறைபாடுகள் |
|---|---|
| **பிட்யூட்டரி** | **வளர்ச்சி ஹார்மோனின் குறைபாடு:**<br>• **குள்ளத்தன்மை :** குழந்தைகளில் குறைவான ஹார்மோன் சுரப்பின் காரணமாக ஏற்படுகிறது.<br>• **அசுரத்தன்மை :** வளர்ச்சி ஹார்மோன் அதிகமாக (குழந்தைகளில்) சுரப்பதால் ஏற்படுகிறது.<br>• **அக்ரோமெகலி :** வளர்ச்சி ஹார்மோன் அதிகமாக (பெரியவர்களில்) சுரப்பதால் ஏற்படுகிறது.<br>**வாசோபிரஸ்ஸின்/ ADH குறைபாடு - டயாபடீஸ் இன்சிப்டஸ்:** அதிகப்படியான சிறுநீர் வெளியேற்றுதல்(பாலியூரியா) |
| **தைராய்டு** | தைராய்டு சுரப்பி இயல்பான அளவு ஹார்மோன்களைச் சுரக்காத நிலை ஆகும்.<br>**ஹைப்போதைராய்டிசம் :** குறைவான தைராய்டு ஹார்மோன்கள் சுரப்பின் காரணமாக ஏற்படுகிறது.<br>• **எளிய காய்ட்டர் :** உணவில் தேவையான அளவு அயோடின் இல்லாததால் ஏற்படுகிறது. கழுத்துப்பகுதியில் வீங்கி காணப்படுகிறது.<br>• **கிரீட்டினிசம் (குழந்தைகள்) :** குள்ளத்தன்மை, குறைவான மனவளர்ச்சி, குறைபாடான எலும்புகள் வளர்ச்சி.<br>• **மிக்ஸிடிமா (பெரியவர்கள்) :** Fiwthd மூளை செயல்பாடு, முகம் உப்பிய (அ) வீங்கிய தோற்றம், உடல் எடை அதிகரிப்பு.<br>**ஹைபர்தைராய்டிசம் :** தைராய்டு ஹார்மோன்களின் அதிகரித்த சுரப்பினால் **கிரேவின் நோய்** உண்டாகிறது. |
| **பாராதைராய்டு** | பாராதைராய்டு சுரப்பி தைராய்டெக்டமி சிகிச்சையில் அகற்றப்படுவதால் பாராதார்மோன் குறைவாக சுரக்கிறது.<br>• **டெட்டனி :** தசை இறுக்கம் (முகம், குரல்வளை இவற்றின் தசைகள் இறுக்கமடைதல்)<br>• காலில், வலியுடன் கூடிய தசைபிடிப்பு. |
| **கணையம்** | **டயாபடீஸ் மெலிடஸ் :** குறைவான இன்சுலின் சுரத்தல்<br>• **ஹைபர்கிளைசீமிய** – இரத்த சர்க்கரை அளவு அதிகரித்தல்.<br>• **கிளைக்கோசூரியா** – சிறுநீரில் அதிகப்படியான குளுக்கோஸ் வெளியேறுதல்<br>• **பாலியூரியா** – அடிக்கடி சிறுநீர் கழித்தல்<br>• **பாலிடிப்சியா** – அடிக்கடி தாகம் எடுத்தல்<br>• **பாலிஃபேஜியா** – அடிக்கடி பசி எடுத்தல் |

| மனித ஹார்மோன்கள் | |
|---|---|
| ★ ஆளுமை ஹார்மோன் – தைராய்டு ஹார்மோன்<br>★ ஆன்டிடையூரிட்டிக் ஹார்மோன் – வாசோபிரஸ்ஸின்<br>★ லாக்டோஜெனிக் ஹார்மோன் – புரோலாக்டின்<br>★ டெட்ராஅயோடோ தைரோனின் – தைராக்சின்<br>★ ஆண் இனப்பெருக்க ஹார்மோன் – டெஸ்டோஸ்டீரான்<br>★ பெண் இனப்பெருக்க ஹார்மோன் – ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரோஜெஸ்டிரான் | ★ அட்ரினல் கார்டெக்ஸ் ஹார்மோன் – கார்ட்டிகோஸ்டீராய்டுகள்<br>★ குளுக்கோகார்ட்டிகாய்டுகள் – கார்ட்டிசோல் & கார்ட்டிகோஸ்டிரான்<br>★ மினரலோக்கார்டிகாய்டுகள் – ஆல்டோஸ்டிரான்<br>★ உயிர் காக்கும் ஹார்மோன் – கார்ட்டிசோல்<br>★ காலத் தூதுவர்கள் – மெலடோனின்<br>★ அவசர கால ஹார்மோன் – அட்ரினலின் & நார் அட்ரினலின் |
| **தாவர ஹார்மோன்** | |
| ★ தாவர ஹார்மோன் – அப்சிசிக் அமிலம் | ★ வாயுநிலை தாவர ஹார்மோன் – எத்திலின் |